# வானவில்

VAANAVIL
ISSUE – 9 SEPTEMBER 2011

இதழ் - 9 புரட்டாதி 2011


# தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான மாற்று ஜனநாயக அணி உருவாக்கப்பட வேண்டும்!

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழகப் பாராளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் என்பவரின் முயற்சியால், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஓகஸ்ட் மாதம் 23, 24ம் திகதிகளில் கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு இலங்கையிலிருந்து பத்து தமிழ் கட்சிகளுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குத் தனித் தனியாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த அதேவேளையில், வீ.ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி, த.சித்தார்த்தனின் புளொட் இயக்கம், தி.சிறீதரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி என்பனவற்றுக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவில் இருந்து கொண்டு, ஈழத் தமிழருக்காக அரசியல் நடாத்திவரும் ஞா.ஞானசேகரம் (பரந்தன் ராஜன்) தலைமையிலான ஈ.என்.டி.எல்.எப் கட்சியும் அழைக்கப்பட்டிருந்தது.




இலங்கைத் தமிழ் கட்சிகளில் முக்கியமானதொன்றாகவும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றானதாகவும் கருதப்படக்கூடிய, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சி இக்கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை. அதேபோல கிழக்கு மாகாணசபையை நிர்வகித்து வரும், சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் அழைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கு தமிழர்களின் இந்த இரண்டு முக்கியமான கட்சிகளும் புதுடில்லி கூட்டத்துக்கு அழைக்கப்படாததிற்குக் காரணம், இந்தியத் தரப்பின் தந்திரோபாயமா அல்லது கொள்கை மாற்றமா என்பது இதுவரை சரியாகத் தெரிய வரவில்லை.

இது ஒருபுறமிருக்க, இந்தச் சந்திப்பால் ஏதாவது அர்த்தபுஸ்டியுள்ள காரியங்கள் கைகூடுமென்று நம்பியிருந்தவர்களுக்கும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இந்தியத் தரப்பைப் பொறுத்தவரை – அதுவும் காங்கிரஸ் அரசைப் பொறுத்தவரை, ராஜீவ் காந்தி மரணித்து பல ஆண்டுகள் கடந்துவிட்டாலும் கூட, அவர் அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் செய்து கொண்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையையே, இலங்கைத் தமிழர்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

## நூறு சிந்தனை மலரட்டும்

# ஜே.வி.பிக்குள் பிளவு! நல்ல சகுனத்தின் இன்னொரு அறிகுறி

மக்கள் விடுதலை முன்னணி என்ற 'ஜே.வி.பி' இயக்கத்துக்குள் பாரிய பிளவு ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் காலத்துக் காலம் அவ்வமைப்புக்குள் பிளவுகள் ஏற்பட்டு வந்தாலும், இம்முறை ஏற்பட்டுள்ள பிளவு அக்கட்சியை வேரோடு சாய்க்கும் அளவுக்கு பாரியது என்று கூறப்படுகின்றது.

சோமவன்ச அமரசிங்க தலைமையிலான தற்போதைய தலைமை ஜே.வி.பியின் ஆரம்பகாலக் கொள்கைகளிலிருந்து (அதன் ஆரம்பகாலக் கொள்கைகளே தவறானவை. அதை இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வதே பொருத்தமானது) வெகுதூரம் விலகிச் சென்றுள்ளதைச் சுட்டிக் காட்டியே, அதிருப்தியாளர்கள் தனி அணியாகச் செயற்படத் தீர்மானித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, ஜே.வி.பி தேசிய இனப்பிரச்சினையில் தொடர்ந்து சிங்கள பேரினவாத நிலைப்பாட்டைச் சார்ந்து நின்றமை, இராணுவ வெறியன் சரத் பொன்சேகாவை கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்தமை, பிற்போக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்தமை போன்ற முக்கியமான பிரச்சினைகளை முன்வைத்தே தற்போதைய பிளவு தோன்றியுள்ளது.

எப்படி பாசிச புலிகளின் அழிவு உண்மையான முற்போக்கு சக்திகளால் முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்டதோ, அதேபோல ஜே.வி.பியின் அழிவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. புலிகள் போலி தேசிய விடுதலை பேசியது போலவே, ஜே.வி.பியும் போலி சோசலிசத்தையே பேசி வந்தமையே இந்த அழிவுக்குக் காரணமாகும்.

சந்திரிகா அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஓரளவு நியாயமான ஆலோசனைகளை 2000ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது, அதை ஐ.தே.க, புலிகளால் வழிநடாத்தப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜாதிக ஹெல உருமய, என்பனவற்றுடன் சேர்ந்து ஜே.வி.பியும் மூர்க்கத்தனமாக எதிர்த்து முறியடித்தது.

தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்களுக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்ட ஜே.வி.பியும், அன்று அந்தத் தீர்வுத் திட்டத்தை எதிர்க்காது விட்டிருந்தால், பாராளுமன்றத்தில் அது மூன்றில் இரண்டு பெரும்பான்னையுடன் நிறைவேறி, இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு நாட்டில் இரத்த ஆறு ஓடுவது தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஜே.வி.பி தமிழ் மக்களின் பிரச்சினையில் மட்டுமின்றி, தென்னிலங்கை சிங்கள மக்களின் பிரச்சினைகளிலும் கூட, மக்கள் விரோத நிலைப்பாட்டையே எடுத்து வந்திருக்கிறது. அது ஆரம்ப காலத்திலிருந்தே தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களை தனது சொந்த குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகக் காட்டிக் கொடுத்து வந்ததிற்குப் பல உதாரணங்கள் உண்டு. ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் ரோகண விஜேவீர உயிரோடு இருந்து, அவர் தலைமையில் 1988 - 89 காலகட்டத்தில் மேற்கொண்ட இரண்டாவது கிளர்ச்சிச் காலத்தில், ஜே.வி.பியின் வேண்டுகோளை ஏற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபடாத பல்வேறு துறைத் தொழிலாளர்களையும், போராட்டங்களில் ஒத்துழைக்காத பொதுமக்களையும் நூற்றுக் கணக்கில் அது சுட்டுப் படுகொலை செய்தது. இந்த மக்கள் விரோதச் செயற்பாட்டை மேற்கொண்ட அன்றே ஜே.வி.பியின் அழிவு காலம் ஆரம்பமாகிவிட்டது.

உலக வரலாற்றில் மக்கள் விரோதிகள் யாரும் நீண்ட காலத்திற்கு கோலோச்சிய வரலாறு இல்லை. புலிகள் - ஜே.வி.பி என்பனவற்றின் வரலாறும் அவ்வாறானதே. அந்த இரு இயக்கங்களும் மக்கள் விரோதமானவையாக இருந்தது மட்டுமின்றி, ஏறக்குறைய ஒரே விதமான தந்திரோபாயங்களையுமே பின்பற்றி வந்துள்ளன. எனவே அவையின் அழிவும் தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்துவிட்டது. ஒன்று ஏற்கெனவே அழிந்துவிட்டது. மற்றது அழிவை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

புலிகளினதும் ஜே.வி.பியினதும் அழிவையிட்டு கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. உண்மையில் அவர்களது அழிவு இலங்கையைப் பீடித்திருந்த ஒரு பாரிய பிணி தீர்வதைப் போன்றது. அவர்களது அழிவுக்காக தமிழ் - சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவதுடன், இப்படியான தீய சக்திகளுக்கு மீண்டும் ஆதரவு வழங்கி தவறிழைக்காமல், புதிய ஜனநாயக நாகரீகத் தன்மை வாய்ந்த அரசியல் கலாச்சாரப் பாதையில் பயணிக்க முன்வர வேண்டும்.

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com



**நா**ம், திரையிசைப்பாடல்களின் நதிமூலம், ரிஷிமூலம், அறியும்பொருட்டு புதைபொருளாராய்ச்சி ஒன்றில் ஈடுபடுவோமேயானால், திடுக்கிடும் தகவல்களல்ல மாறாக பல சுவாரஸ்யமான, தேடல்களைத் தூண்டும் தகவல்களும் கிடைக்கப்பெறுவோம்.

தமிழ்த் திரையிசைப்பாடல்கள் இன்று நேற்று தொடங்கியவையல்ல. சுமார் 75 வருடங்களுக்குமேல் பவனிவரத் தொடங்கியவை. தொலைக்காட்சி நிகழ்ச்சியான நேற்றைய சப்தஸ்வரங்களிலிருந்து, இன்றைய super singer junior-3 வரை அதன் தொடர்ச்சியை அவதானிக்கமுடியும். சப்தஸ்வரங்கள், ராகமாலிகா, மனதோடுமனோ, என்னோடு பாட்டுப்பாடுங்கள், ஹரியுடன் நான், என இன்னோரன்ன நிகழ்ச்சிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். அன்றைய பாடல்களின் குணாம்சங்களையும், கூறுகளையும், இன்றைய பாடல்களிலும் அவதானிக்கமுடியும். மிக இளம்பராயத்துப் பாடகர்கள் மூலம்

# திரையிசைப்பாடல்களின் ஊற்றுமூலமும் கர்நாடக சங்கீதத்தின் செல்வாக்கும்

கே.பி. சுந்தராம்பாளையும், எம்.எஸ் சுப்புலட்சுமியையும், ரி.ஆர்.மகாலிங்கத்தையும் தரிசிக்க முடியும். முதியவர்கள் அவற்றை நினைவுகூர்ந்திடவும் முடியும்.

இன்றும், சினிமாவில் இடம்பெற்றுவரும் ஏராளமான பாடல்களுக்கு இசை நாடகத்தின் பாதிப்பே மூலகாரணம். படத்தின் கருவே பாடல்களில் புனையப்பட்டு பாடல்களால் சொல்லப்பட்டவை.

எஸ்.ஜி. கிட்டப்பாவே அன்றைய இசை நாடகத்தில் கொடிகட்டிப்பறந்த ஜாம்பவான். இவர் 1906இல் நெல்லைமாவட்டம் செங்கோட்டையில் அவதரித்தவர். இவரின் பின்புலம் இசை நாடகத்தின் தந்தை சங்கரதாஸ்சுவாமிகளின்(1867 – 1922) நாடகப்பட்டறை. இவர், தனது சகோதரர்களுடன் ஆறு வயதிலேயே இணைந்து தன்னை அடையாளப் படுத்திக்கொண்டவர். புடம் போட்டுக்கொண்டவர். சகோதரர்கள் அனைவருமே சுவாமிகளின் நாடகக்குழுவின் நிரந்தர நடிகர்களாக வலம் வந்தவர்கள்.

நாடகமேடையிலிருந்து திரைக்குக் காலடியெடுத்து வைக்கமுன்னரே அவர் மரணித்துவிட்டதுதான் மிகவும் சோகமானவரலாறு. அவரது மரணமும் (1933), தமிழ் பேசும்படத்தின் தோற்றமும் (1931) சமகாலமாக இருந்ததும் ஒரு காரணம். அவரது அற்ப ஆயுள் அவரது கலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தாலும், அவரது இசையே திரையிசைக்கு ஆரம்பப்புள்ளி. தற்காலத்திலும்கூட அவரைப்போன்று மேல்ஸ்தாயியில் பிருகா போட முடியாதவர்கள் ஒரு முழுமையான பாடகராக வெளிவர முடியாது. கிட்டப்பாவே அன்றைய பாட்டு நட்சத்திரங்களுக்கு ஆதர்ஷ புருஷராக விளங்கியவர். அன்றைய நட்சத்திரங்களெல்லாம் கிட்டப்பா தாசர்களாகவே உலாவந்தவர்கள். கிட்டப்பாவின் நாடகமென்றால், தந்தையின் கண்டிப்பையும் மீறிச் சென்றிடுபவர்தான் தியாகராஜபாகவதர். ரி.ஆர். மகாலிங்கமோ, கிட்டப்பாவின் பாடல்களை, தனது படங்களில் மறுவார்ப்புச் செய்திடுவார். கிட்டப்பாவின் பாணியைப் பின்பற்றி, இவர் ஸ்ரீவள்ளியில் (1945) பாடிய பாடல்களை, பலர் ஒப்ப மறுத்தனர். கிட்டப்பாவின் பாடல் ஒலிப்பதிவைப் பயன்படுத்தி மகாலிங்கத்தை நடிக்கச்செய்துள்ளனர் என்றனர். கிட்டப்பாவின் சுருதி சுத்தத்திற்கும், அவரது ஐந்துகட்டை ஆறுகட்டை என்று உச்சஸ்தாயியில் பாடும் திறனுக்கும், தானே வாரிசு என்று மகாலிங்கம் நிரூபித்த பாடல்தான் காயாதகானகத்தே. (நன்றி: வாமனன்)

**இசைப்பிரியன்**

கிட்டப்பாவை, வி.ஏ.செல்லப்பா(இவர் கிட்டப்பாவின் ஒன்றுவிட்ட மருமகன்), ரி.ஆர்.மகாலிங்கம், சிவாஜியின் ஆரம்பகாலப் பாடகரான சி.எஸ். ஜெயராமன் போன்றோர் பிரதிபலித்ததாகக் குறிப்பிடுகின்றனர். வி.ஏ.செல்லப்பா 50வீதமும், ரி.ஆர். மகாலிங்கம் 80வீதமும் பிரதிபலித்ததாக, அன்றைய பத்திரிகையாளரான குண்டூசி கோபால் குறிப்பிட்டிருந்தார். கிட்டப்பாவின் பாணி, ரி.ஆர்.மகாலிங்கம் மூலம் சுமார் 40ஆண்டுகாலம் திரையிசையில் கோலோச்சியதாக வாமனன் குறிப்பிடுகிறார்.

கிட்டப்பா நாடகமேடையில் பாடிய பல பாடல்கள் திரையில் மறுவார்ப்புச் செய்யப்பட்டன. அந்த வர்ண மெட்டுக்களுக்கு வெவ்வேறான உள்ளுடன் கொடுக்கபபட்டன. மறுவார்ப்பு என்ற வகையில், அவரது கரகரப்பிரியா ராகத்திலமைந்த "காயாத கானகத்தே" பாடலை, வள்ளி திருமணம் என்ற நாடகத்தில் வி.ஏ.செல்லப்பாவும், சுப்பையா பாகவதரும் போட்டிபோட்டுப் பாடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிட்டப்பாவின் மேடையேற்றங்கள் தமிழ்நாட்டுடன் மட்டுப்படுத் தப்படாமல் கடல்கடந்து இலங்கையிலும் கால்பதித்தது. 1916இல் அன்றைய யாழ்ப்பாண நாடகக்குழுவின் அழைப்பையேற்று அவரும், அவரது சகோதரர்களும் பல இசைநாடகங்களை அரங்கேற்றினர். அன்றைய காலகட்டத்தில், அவரது பல பாடல்கள் மிகவும் பிரபல்யமடைந்து யாழ்ப்பாணத்து மக்களை ஆகர்ஷித்ததாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரது "காயாத கானகத்தே" யாரைத்தான் விட்டுவைத்தது?. அவர் நடித்த "தசாவதாரம்" என்ற நாடகம் ஒரேயாண்டில் 200 தடவைகளிற்கு மேல் மேடையேறியமை, அவரின் இசையின் ஆகர்ஷிப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு.

1925 இன் இறுதிவாக்கில் அவரது வள்ளிதிருமணம் இலங்கையில் மேடையேற்றப்பட்டது. அத்தருணம் கொடுமுடி கோகிலம் என்றழைக்கப்பட்ட கே.பி.சுந்தராம்பாளும் முதன்முறையாக கிட்டப்பாவுடன் இணைந்து நடித்தார். அதன்பின்பே அவர்களிடையே காதல் மலர்ந்து முறைப்படியான திருமணத்தில் முடிந்தது. அது ஒரு கலப்புத் திருமணமும்கூட.

பதினாறு வயதினிலே திரைப்படத்திற்காக பின்வரும் சரணத்தைத் தந்தார்.

"கிட்டப்பாவின் பாட்டைக்கேட்டேன்
சின்னப்பாவை நேரில்பார்த்தேன்.
கொட்டக்கொட்ட வருகுதம்மா
சங்கீதம்மாப் பெருகுதம்மா".
(ஆட்டுக்குட்டி......)

அதனை இளையராஜா செஞ்சுருட்டி இராகத்தில் உருட்டி மலேசியா வாசுதேவனிடம் கொடுக்க, அவர்அதனை விகடத்தோடு மெருகூட்டினார். அது 1977 இல், பட்டிதொட்டியெங்கும் ஒரு கலக்கு கலக்கியது.

செஞ்சுருட்டியில், இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்பே (1937இல்) வெளிவந்த சிந்தாமணி படத்திற்காக தியாகராஜ பாகவதர் (1910 – 1958) பாடியுள்ளார். "ராதே உனக்கு கோபமாகாதடி" என்ற அந்தப்பாடலை, பாபநாசம் சிவம் இசையமைத்திருந்தார். இதே பாடலை அதேசுருதியில் சௌந்தரராஜனும் பாடிப் பிரபல்யம் பெற்றிருக்கிறார். இதே இராகத்தில் 1990களில் வெளிவந்த ஜென்டில்மன் படத்திற்காக ஏ.ஆர்.ரகுமானும் தந்துள்ளார். "என்வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப்பார்" என்ற பாடலை ஒருமுறை ஹம் பண்ணிப்பாருங்கள் செஞ்சுருட்டி இராகத்தின் ஜீவன் புரிய வரும். காவடிச்சிந்து பாடவும் இது உகந்ததுதான்.

என்னவோ என்நெஞ்சில் இசைவந்து துளைத்தது........இசைவந்த திசைபார்த்து மனங்குளிர்ந்தேன். *

# வாச்சாத்தி பாலியல் வழக்கு: 215 பேரும் குற்றவாளிகள்

சந்தன மரம் பதுக்கல் குறித்து விசாரிக்க சென்ற போலீசார், வனத்துறை, மற்றும் வருவாய் துறை அதிகாரிகள், வாச்சாத்தியில் மலைக்கிராமத்தில் இருந்த 18 பெண்களை கற்பழித்தும், அக்கிராம மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தியும் அராஜகத்தை அரங்கேற்றினர். இந்த வழக்கு தொடர்பாக 29.09.11 இல் தர்மபுரி மாவட்ட செஷன்ஸ் கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட 215 பேரும் குற்றவாளிகள் என நீதிபதி குமரகுரு தீர்ப்பளித்தார்.

1992ம் ஆண்டு இடம்பெற்ற இச்சம்பவத்தில், மொத்தம் 269 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவர்களில் 54பேர் ஏற்கனவே இறந்து விட்ட நிலையில் இறுதியாக, 126 வனத்துறையினர், 84 காவல்துறையினர், 5 ரேஞ்சர்கள் என 215 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு 19 வருடங்களின் பின் இன்று தர்மபுரி மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது.

வாச்சாத்தி கிராமம் தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவுக்கு உட்பட்டது. இது தர்மபுரியில் இருந்து 50 கி.மீட்டர் தூரத்திலுள்ள அரூரில் இருந்து 16 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு வசிப்பவர்கள் மலைஜாதியினர் ஆவர்.

# மார்க்சின் 'மூலதனம்' நூலைப் படித்த போப்!

"2008 இல் அமெரிக்காவில் வெடித்த பொருளாதார நிதி நெருக்கடி ஐரோப்பிய நாடுகளையும், மற்றைய உலக நாடுகளையும் பாதித்தது. 1937 இல் அமெரிக்காவில் ஏற்பட்டது போன்ற பெரும் பொருளாதார வீழ்ச்சி இன்று மீண்டும் முதலாளித்துவ நாடுகளை உலுக்கிக் கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடி வெடித்த போது, வத்திக்கான் போப் உட்பட பலர் மீண்டும் மார்க்சினுடைய 'மூலதனம்' நூலைப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள்."

**– 'மார்க்சியம் உருவான வரலாறு' என்ற நூலின் முன்னுரையிலிருந்து.**

# இந்தியா Vs சீனா படர்ந்து பரவும் பனிப்போர்

- சமஸ் -

'இந்தியா இந்த ஆண்டு பாதுகாப்புத் துறைக்கு 1 லட்சத்து 64 ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கியுள்ளது' என்ற செய்தி வெளியான சில தினங்களிலேயே, சீனாவிலிருந்து பதிலடி...தங்கள் பாதுகாப்புத் துறையைப் பலப்படுத்த 4 லட்சத்து 57 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாக செய்தி வெளியானது.



இந்தியா, உள்நாட்டுத் தயாரிப்பான இலகு ரக தேஜஸ் போர் விமானத்தை ராணுவத்தில் சேர்த்து இருக்கிறது. சீனா, ஒருபடி மேலே போய், எதிரி நாட்டு ரேடரால் கண்டுபிடிக்க முடியாத சூப்பர்சானிக் போர் விமானங்களைச் சொந்தமாகவே உருவாக்க ஆரம்பித்துவிட்டது. எதிரி நாட்டு ஏவுகணைகளை வானிலேயே வழி மறித்து அழிக்கும் ஏவுகணையை ஆறாவது முறையாகச் சோதனை செய்து பார்த்திருக்கிறது இந்தியா. சீனாவோ அடுத்த கட்டமாக, லேசர் ஆயுத ஆராய்ச்சியில் இறங்கிவிட்டது.

ஒரு காலத்தில் அமெரிக்கா – ரஸ்யா பனிப்போர் உருவான மாதிரி, இப்போது இந்தியா – சீனா பனிப்போர் ஊதி ஊதி உருவாக்கப்படுகிறது. சரியாகச் சொன்னால், இந்த ஊதிப் பெருக்கல் 2007ல் திட்டமிடப்பட்டது. உலகப் பொருளாதார வீழ்ச்சியால் சர்வதேச ஆயுதச் சந்தை 9 சத விகித இழப்பைச் சந்தித்தது. ஈராக்கிலிருந்தும் ஆப்கானிஸ்தானிலிருந்தும் அமெரிக்கா படிப்படியாகப் படைகளை விலக்கிக் கொள்ள முடிவெடுத்தபோது, அமெரிக்க ஆயுத நிறுவனங்கள் சற்றே ஆட்டம் காணத் தொடங்கின. அங்கே ஆரம்பித்தது ஆயுத அரசியல்!

உலகில் பாதுகாப்புக்காகச் செலவிடும் நாடுகளில் அமெரிக்கா முன்னணி வகிக்கிறது. ஏறத்தாழ 75 லட்சம் கோடி ரூபா மதிப்புள்ள சர்வதேச ஆயுதச் சந்தையில் 41.5 சதவிகித ஆயுதங்களை அமெரிக்கா வாங்கிக் குவிக்கிறது. சுமார் 20 சதவிகித ஆயுதங்கள் ஐரோப்பிய நாடுகள் பங்கு. 7.5 சதவிகித ஆயுதங்களை வாங்குகின்றன மத்திய கிழக்கு நாடுகள். அடுத்த இடத்தில் இருக்கும் சீனா 5.8 சதவிகிதம், இந்தியா 2 சதவிகிதம்.

2008ல் தொடங்கி கடந்த மூன்று ஆண்டுகளில் 41,000 கோடி ரூபாவுக்கு அமெரிக்காவுடன் ஆயுத ஒப்பந்தங்களில் நாம் (இந்தியா) கையெழுத்திட்டு இருக்கிறோம். கடந்த நவம்பரில் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் வருகையின்போது, மேலும் 15,000 கோடி ரூபாவுக்கு '10 சி – 17 குளோப் மாஸ்டர்' விமானங்களை வாங்க இந்தியா முடிவெடுத்தது. இப்போது இந்தியாவின் மிகப் பெரிய ஆயுத விநியோகஸ்தர் அமெரிக்காதான்!

ஏறத்தாழ 1.5 டிரில்லியன் டாலர் (1 டிரில்லியன் என்பது ஒரு லட்சம் கோடி) பணம் புரளும் ஆயுதத் தயாரிப்புத் துறையின் உயிர் ஆதாரமே... நாடுகளுக்கு இடையேயான பகைதான்! எல்லா நாடுகளும் அண்ணன் தம்பியாகப் பழகிவிட்டால், ஆயுதங்களை எப்படி விற்பது? யுத்தம் மூண்டால்தானே அவர்கள் நித்தம் லாபம் சம்பாதிக்க முடியும்?! இதற்காக ஒவ்வொரு நாட்டைச் சுற்றியும் பதற்றமான சூழல்களையும் ஆயுதங்கள் வாங்குவதற்கான தேவையையும் உருவாக்குவதற்காக அமெரிக்க ஆயுத நிறுவனங்கள் பில்லியன்களில் முதலீடு செய்கின்றன.

அமெரிக்க – சோவியத் பனிப்போர் இருந்த காலகட்டத்தில், ஆயுதத் தயாரிப்பு நிறுவனங்கள் விற்பனையில் உச்சத்தில் இருந்தன. சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பின் ஆயுத நிறுவனங்கள் வீழ்ச்சியைச் சந்தித்தன. இப்போது இந்தியா – சீனாவை வைத்து சேல்ஸ் ரேட்டை ஏற்ற முயல்கின்றன.

உலகப் பொருளாதார மந்த நிலையைத் தொடர்ந்து முன்னணி அமெரிக்க ஆயுத நிறுவனமான 'நார்த்ராப் க்ருமேன்' தன்னுடைய ஆயுத விற்பனைக்கு ஆள் பிடிக்க 20.6 மில்லியன் டாலர்களை ஒதுக்கியது. அமெரிக்க அரசு 'எஃப் 22' ரக விமானங்கள் பயனற்றவை எனக் கருதி அவற்றின் கொள்முதலை நிறுத்த முயன்றபோது, 'லாஹூட் மார்டின்' ஆயுத நிறுவனம் தன்னுடைய 'செல்வாக்கு' மூலம் அதைத் தடுத்து நிறுத்தியது.

சரி, இந்தியாவுக்கு இந்தப் போட்டி தேவைதானா? இந்தியாவில் 60 கோடி மக்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு நாளைக்கு 50 கோடி மக்கள் 100 ரூபா கூட சம்பாதிக்க முடியாதவர்களாக வாழ்கிறார்கள். சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தியாவால் கல்வித் துறைக்காக அதிக பட்சம் 52,057 கோடி ரூபாவுக்கு மேல் ஒதுக்க முடியவில்லை. இவ்வளவு குறைகளோடு இவ்வளவு ஆயுதங்களை வாங்கிக் குவிக்க வேண்டுமா?

வறுமையும், வேலைவாய்ப்பு இன்மையும், விரக்தியும் சூழ்ந்த பின்னணியில் மாவோயிஸ்ட்டுகளில் ஆரம்பித்து, பல தரப்புகளில் இருந்தும் உள்நாட்டுப் போர் உருவாவதற்கான சூழல் இந்தியாவில் இருக்கிறது.

சொந்த நாட்டை வளப்படுத்தாமல் இன்னொரு நாட்டை எதிரியாகக் காட்டிக் கொண்டு, ராணுவ பலத்தை மட்டுமே பெருக்கினால், அந்த நாட்டின் நிலை என்னவாகும்? பாகிஸ்தான் அதற்கு உதாரணம். கல்வி, உணவு உற்பத்தி, தொழில்துறை, தொழில் நுட்பம் என எந்த விடயத்திலும் முன்னேற முடியாமல் தினம் குண்டு வெடிப்புகளுக்கிடையில் அல்லாடும் பாகிஸ்தான் எமது ரோல் மொடலா?

இப்போது நாம் சீனாவாகப் போட்டி போடுகிறோமா…இல்லை பாகிஸ்தானாகப் போட்டி போடுகிறோமா?

நன்றி: ஆனந்த விகடன்
*

# மேற்கு நாடுகளின் முட்டாள்தனமான பொருளாதாரக் கொள்கைகளை இலங்கை ஒருபோதும் பின்பற்றாது!

## சிரேஸ்ட அமைச்சர் டாக்டர் அமுனுகம தெரிவிப்பு!!

“மேற்கு நாடுகளின் சில முட்டாள்தனமான பொருளாதாரக் கொள்கைகளை லங்கை ஒருபோதும் பினஇிபற்றாது” என இலங்கையின் சிரேஸ்ட அமைச்சர்களில் ஒருவரான டாக்டர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். ‘கொழும்பு திட்டம்’ அமைப்பின் 60வது நிறைவு வைபவம் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற போதே அமைச்சர் அமுனுகம இவ்வாறு கூறினார்.

“இந்தியா, சீனா உட்பட ஆசிய பசிபிக் பிராந்தியத்திலுள்ள சில நாடுகள் பினபற்றி வரும் பொருளாதாரக் கொள்கைகள், சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்தவைகளை விட அதிகம் தாக்கமானவை பெறுமதியானவை. அதன் காரணமாக இன்று இந்தியாவும் சீனாவும் உலகின் சகதிமிக்க பொருளாதார மையங்களாக மாறியுள்ளன” எனவும் அமுனுகம கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், “சீனாவைப் பொறுத்தவரை மேற்குலகுடன் ஒப்பிடுகையில், கூடிய சனத்தொகை, குறைந்தளவு தொழில்நுட்ப வளர்ச்சி, குறைவான பயிற்சி என்பனவற்றைக் கொண்டிருந்த போதிலும், மேற்கைவிட அதிக வளர்ச்சியை ஈட்டியுள்ளது. அதற்குக் காரணம் அது பின்பற்றும் பொருளாதாரக் கொள்கைகளே. இன்று சீனாவின் பொருளாதாரம் ஏற்றுமதி அடிப்படைத் திறன் கொண்டதாக வளர்ந்துள்ளது. ஆனால் அதன் பொருட்களை வாங்க மேற்கு நாடுகளிடம் பணம் இல்லை. அப்பணத்தையும் மேற்கு நாடுகளுக்கு சீனாவே கொடுத்து உதவுகின்றது” என்றார்.

இலங்கையின் அபிவிருத்தி பற்றி அவர் குறிப்பிடுகையில், “இலங்கையைச் சேர்ந்த 1.2 மில்லியன் (12 லட்சம்) மக்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். அவர்கள் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணியாகக் கிடைக்கும் 4.5 பில்லியன் கோடி ரூபா பணம், இலங்கையின் அபிவிருத்திக்கு – குறிப்பாக கிராமப்புற அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது” என்றார்.

# புதிய நூல் வெளியீடு

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தின் புதிய வெளியீடாக **ந.இரவீந்திரன்** எழுதிய **“முற்போக்கு இலக்கிய எழுச்சி”** என்ற நூல், கொழும்பில் ஆகஸ்ட் 28ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந் நூலில் இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர்களான காலஞ்சென்ற **கே.டானியல்** மற்றும் **நீர்வை பொன்னையன், டொமினிக் ஜீவா, என்.கே.ரகுநாதன்** ஆகியோரின் படைப்புகள் ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

188 பக்கங்கள் கொண்ட இந்த நூலின் இலங்கை விலை ரூபா 400 ஆகும். பிரதிகள் வேண்டுவோர் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும், இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்திடமும் பெற்றுக் கொள்ளலாம். புலம்பெயர் நாடுகளிலுள்ளோர் இப்புத்தகத்தை வாங்க kailashpath@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

# ஊடக தர்மத்தை காலில் போட்டு மிதிக்கும் யாழ்ப்பாணத்து உதயன்

இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லையென்ற பிரச்சாரம் கடந்த பல வருடங்களாக உலகளாவிய ரீதியில் செய்யப்பட்டு வருகிறது. அதைச் செய்பவர்களில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையும் ஒன்று. ஆனால் இந்த உதயன் பத்திரிகையில் வெளிவரும் செய்திகளைப் பார்த்தால், இலங்கையில் தாராளமான ஊடக சுதந்திரம் இருக்கிறது என்பது நிருபணமாவது மட்டுமின்றி, ஊடக சுதந்திரத்தின் பெயரால் என்னவிதமான கயமைத்தனங்களை அங்கு செய்யலாம் என்பதும் தெரிய வரும். உண்மையில் ஊடக சுதந்திரத்தை பல்வேறு நாசகார நோக்கங்களுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதில் ஒருவர் பயிற்சி பெற வேண்டுமானால், அதை உதயனிடமிருந்துதான் கற்றுக் கொள்ள முடியும்.

உதாரணத்துக்கு இதோ சில.....

'மகிந்த அரசு இனப்பிரச்சினையைத் தீர்க்காது' என கொட்டை எழுத்தில் ஒரு நாள் தலைப்புச் செய்தி வரும். அடுத்த நாள் 'அரசு – கூட்டமைப்பு பேச்சில் முன்னேற்றம் – அரசு கூறுகிறது' என்று ஒரு செய்தி தவிர்க்க முடியாமல் எங்காவது ஒரு மூலைக்குள் போடப்பட்டிருக்கும். அதற்கடுத்த நாள் 'இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாம் ஒருபோதும் விட மாட்டோம் – சிரேஸ்ட அமைச்சர் தெரிவிப்பு' என ஒரு தலைப்புச் செய்தி வரும். ஆனால் அந்த சிரேஸ்ட அமைச்சர் யார் என்ற பெயர் இருக்காது.

'ஐ.நா. கூட்டத்துக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நியூயோர்க்கில் சிறை பிடிப்பு – ஆங்கிலப் பத்திரிகை தகவல்' என்று இன்னொரு செய்தி வரும். ஆனால் அந்த ஆங்கிலப் பத்திரிகை எதுவென்று விபரம் இருக்காது.

'இந்திய – இலங்கை கடற்படைகளின் கடற்படைப் பயிற்சி திடீரென ஒத்தி வைப்பு! – இராமதாசின் எதிர்ப்பால் இந்திய அரசு பின்வாங்கியதாகத் தகவல்' என மற்றுமொரு செய்தி வரும். 'அட இராமதாஸ், வை.கோ போன்றவாகள் எதிர்ப்பார்கள் என்று தெரிந்து. கொண்டுதானே பயிற்சிக்குப் போனாங்கள். பிறகு ஏன் அவங்களுக்குப் பயந்து இடையில் பின்வாங்கல்?' என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்ல உதயனில் ஆள் இருக்காது.

இதுதவிர......

'மாவை சேனாதிராசா ஆவேசம்'
'சுரேஸ் பிரேமச்சந்திரன் சவால்'
'அரியநேத்திரன் காட்டம்'
'சிறீதரன் சீற்றம்'




'சரவணபவன் கேள்வி' என அப்பாவித் தமிழ் மக்களை உசுப்பேத்த பல போஸ்டர் தலைப்புச் செய்திகளும் முன்பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் ஆவேசமாகப் பிரசுரமாகும்.

இவைதவிர அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 'புகழ்' பாடுவதற்கென்றே இலவசமாக தினமும் சில பத்திகள் ஒதுக்கப்படுகின்றன. அரச எதிர்ப்பு, ஐ.தே.க ஆதரவு, தமிழ் இனவெறியூட்டுவது, பொய் புரளிகளைக் கிளப்பி விடுவது என, அந்தப் பத்திரிகை யாழ்ப்பாண மக்களின் தலையில் சம்பல் அரைத்து வருவதைப் பார்க்க, உண்மையான தமிழனுக்கு வயிறு பற்றியெரியாமல் இருக்க முடியாது.

இவ்வளவுக்கும் இந்தப் பத்திரிகையின் முதலாளி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, அவரை வைத்தும் கூட்டமைப்பை ஒருவர் விளங்கிக் கொள்ள முடியும்.

இந்தப் பத்திரிகையின் முதலாளி, பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 'சப்றா' என்ற பெயரில் நடைபெற்ற நிதி நிறுவனம் ஒன்றின் முக்கியமான நிர்வாகி என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த நிறுவனத்தில் பல தமிழ் குடும்பங்கள் தமது எதிர்காலத் தேவைக்காக வைப்பிலிட்டிருந்த பணத்தை, அதன் நிர்வாகிகள் ஏப்பமிட்டதால், பலர் தற்கொலை கூட செய்து கொண்டனர். அந்த மோசடி சம்பந்தமாக 'இன்டர்போல்' வரையும்

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...

# தாலியும் மஞ்சளும் தொன்றுதொட்டு இருந்து வருபவையல்ல!

## பேராசிரியர் தொ.பரமசிவன் கூறுகிறார்



தாலி கட்டுதல், திருப்பூட்டுதல், மாங்கல்யதாரணம் ஆகிய சொற்கள் திருமணத்தில் பெண்ணின் கழுத்தில் ஆண் தாலி அணிவிப்பதைக் குறிக்கின்றன. தாலி என்ற சொல்லின் வேர்ச்சொல்லை இனங்காண முடியவில்லை. ஆனால் தாலி, தாலாட்டு ஆகிய சொற்களைக் கொண்டு தால் என்பது தொங்கவிடப்படும் அணி (காதணி, மூக்கணி, விரலணி போல) என்று கொள்ளலாம்.

நமக்குக் கிடைக்கும் தொல்லிலக்கியச் சான்றுகளிலிருந்து (சங்க இலக்கியம், சிலப்பதிகாரம்) அக்காலத்தில் தாலி கட்டும் பழக்கம் இருந்ததில்லை என்றே தோன்றுகிறது.

தமிழர் திருமணத்தில் தாலி உண்டா இல்லையா என்று தமிழறிஞர்களுக்கு மத்தியில் 1954இல் ஒரு பெரிய விவாதமே நடந்தது. இதைத் தொடக்கி வைத்தவர் கவிஞர் கண்ணதாசன். தாலி தமிழர்களின் தொல் அடையாளந்தான் என வாதிட்ட ஒரே ஒருவர் ம.பொ.சி. மட்டுமே.

கி.பி. 10ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் தாலிப் பேச்சே கிடையாது என்கிறார் கா.அப்பாத்துரையார். பெரும்புலவர் மதுரை முதலியாரும், ஆய்வறிஞர் மா.இராசமாணிக்கனாரும் பழந்தமிழர்களிடத்தில் மங்கலத்தாலி வழக்கு இல்லை என உறுதியுடன் எடுத்துக் கூறினர்.

தொல்பழங்குடி மக்கள், பிள்ளைகளைத் தீயவை அணுகாமல் காப்பதற்குப் பிள்ளைகளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருள்களைக் கோர்த்துக் கட்டும் வழக்கம் இருந்தது. இவ்வாறு ஐந்து பொருள்களைப் பிள்ளைகளின் அரைஞாண் கயிற்றில் கட்டுவதைச் சங்க இலக்கியங்கள், ‘ஐம்படைத் தாலி’ என்று குறிப்பிடுகின்றன.

இந்தியச் சிந்தனையாளர்களில் தந்தை பெரியார்தான் முதன் முதலில் தாலியை நிராகரித்துப் பேசவும் எழுதவும் துவங்கினார். அவரது தலைமையில் தாலி இல்லாத திருமணங்கள் நடைபெறத் தொடங்கின. ஆணுக்குப் பெண் தாலி கட்டும் அதிர்ச்சி மதிப்பீட்டு நிகழ்ச்சிகளும் சில இடங்களில் நடந்தன. 1968இல் அண்ணா காலத்தில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதைத் திருமணச் சட்டம், தாலி இல்லாத திருமணத்தைச் சட்டபூர்வமாக அங்கீகரித்தது.

கடைசியாக ஒரு செய்தி – சங்க இலக்கியங்களில் தாலி மட்டுமல்ல, பெண்ணுக்குரிய மங்கலப் பொருள்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் ஆகியவையும்கூடப் பேசப்படவே இல்லை.

மஞ்சள் பூசிக் குளிப்பதும், மஞ்சள் கயிறு அணிவதும் பெண்ணுக்குரிய முக்கியமான விடயங்களாக ஆகியுள்ளன. மஞ்சள் என்பது பெண்ணோடும் ‘மங்களகரம்’ என்பதோடும் இணைத்துப் பேசப்படுகிறது. ஆனால் ஆரோக்கியம் தொடர்பான ஒரு பொருளாகவே தமிழர் வாழ்வில் மஞ்சள் முன்பு இருந்துள்ளது. கிருமி எதிர்ப்பு சக்தி மஞ்சளில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. ‘நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்’ கண்ணனை நீராட்டுவது பற்றிப் பெரியாழ்வார் பாசுரம் பேசுகிறது. எனவே குழந்தைக்குத் தேய்த்துக் குளிப்பாட்டும் பொருளாக மஞ்சளைத் தமிழர்கள் பயன்படுத்தியது தெரிய வருகிறது.

(இந்தக் குறிப்புகள் தமிழகத்தின் முன்னணி ஆய்வாளர்களில் ஒருவரும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்கள் எழுதிய ‘அறியப்படாத தமிழகம்’ என்ற நூலிலிருந்து நன்றியுடன் எடுத்துப் பிரசுரிக்கப்படுகின்றது)

ஒரு பிற்குறிப்பு:

மனித சமுதாயத்தில் தாலி மட்டுமல்ல, அநேகமான பழக்க வழக்கங்கள் இடைப்பட்ட வெவ்வேறு காலகட்டங்களில் உருவாகி வளர்ந்தவையே. பேரறிஞர் டார்வின் அவர்களின் ஆய்வுகளின் அடிப்படையில், மனிதன் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்த போது, இந்த ‘புனித’ப் பொருள்களையெல்லாம் அவன் தன்னுடன் கூட எடுத்து வரவில்லை.

குடும்ப அமைப்புகூட இடையிட்டு வந்த ஒன்றுதான் என்பதை, மார்க்சிய மூலவர்களில் ஒருவரான

பிரெடிரிக் ஏங்கெல்ஸ் எழுதிய, 'குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' எனும் நூலை வாசிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

அதுமட்டுமல்ல, கற்பனாவாத ஆன்மீகவாதிகள் குறிப்பிடுவதுபோல, கடவுள் மனிதனை உருவாக்கவில்லை, அவரையும் மனிதன் தனது தேவை கருதி இடையில் உருவாக்கினான் என்பதே உண்மையாகும்.

*

7ம் பக்கத்தொடர்ச்சி...

முறைப்பார்டுகளும் செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனது கோடைகால விடுமுறையை சந்தோசமாக யாழ்ப்பாணத்தில் கழிக்கச் சென்றபோது, அங்கு இந்த 'உதயன்' அடிக்கும் கொட்டத்தைக் கண்டு, மனவெறுப்போடும் அங்குள்ள மக்கள் மீதான அனுதாபத்தோடும் கனடா திரும்பினேன்.

**திருநீலகண்டன் - கனடா**

*

## மார்க்சின் குழந்தை பிறந்தபோது தொட்டில் இல்லை! இறந்தபோது சவப்பெட்டி இல்லை!!

"எங்களுடைய சிறு குழந்தை பிரான்சிஸ்கா கடுமையான மார்புச்சளி நோயால் படுத்துக்கொண்டு விட்டது. அது பாவம், மூன்று நாள் மரணத்துடன் போராடியது. அதனுடைய அவஸ்தை சொல்லி முடியாது. கடைசியில் அதனுடைய ஆயுள் முடிந்துவிட்டது. எங்களுடைய அதிகமான பணமுடை காலத்தில் அக்குழந்தை இறந்துவிட்டது. அது பிறந்த போது தொட்டில் வாங்கப் பணம் இருக்கவில்லை. இறந்த போது சவப்பெட்டி வாங்கவும் பணமிருக்கவில்லை." கார்ல் மார்க்சின் மனைவி ஜென்னி, தனது நினைவுக் குறிப்புகளில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

சொல்லொணா வறுமையில் வாடியபோதும், "உங்களுடைய மகத்தான பணியைத் தொடருங்கள். நான் உங்களோடு இருக்கிறேன்" என்று, ஜென்னி தனது கணவர் மார்க்சுக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

'வரலாற்றின் உந்து விசையைப் பற்றிய மாபெரும் விதியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் மார்க்ஸ். வரலாற்று ரீதியான அனைத்துப் போராட்டங்களும், அவை அரசியல், மத, தத்துவஞான அல்லது வேறு ஏதாவதொரு சித்தாந்தத் துறைக்குள்ளாக முன்னேறிய போதிலும், உண்மையில் அவை அநேகமாக சமூக வர்க்கங்களின் போராட்டங்களின் தெளிவான வெளியீடுகள் மட்டுமே. இந்த வர்க்கங்கள் இருப்பதும் அதன் காரணமாக இவற்றுக்கிடையே ஏற்படுகின்ற மோதல்களும் கூட அவற்றின் பொருளாதார நிலைமையின் வளர்ச்சியின் தரத்தினால், அவற்றின் உற்பத்தி முறையினாலும் அதனால் நிர்ணயிக்கப்படுகின்ற பரிவர்த்தனை முறையினாலும் நிலைப்படுத்தப்படுகின்றன என்பது அந்த விதியாகும்.'

**—எங்கெல்ஸ்**

## வாகனப்புகையால் மாரடைப்பு

மிக்க வாகன நெருக்கடியான இடங்களில் உண்டாகும் புகையை நீண்ட நேரம் சுவாசிப்பதால் மாரடைப்பு ஏற்படக்கூடிய தீவிளைவு உண்டு என இங்கிலாந்து ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.பொதுவாகவே வாகனங்கள் வெளிவிடும் புகையைத் தொடர்ந்து சுவாசிப்பதால் பல்வேறு தீயவிளைவுகள் உண்டாகும். எனவே இயன்றவரை வாகனப்புகையைச் சுவாசிப்பதைத் தவிர்த்துக்கொள்ளல் நன்று.

சுமார் ஆறு மணிநேரத்துக்கு வாகனப்புகை அடர்த்தியாகவுள்ள இடங்களில் தொடர்ச்சியாக இருப்போருக்கு மாரடைப்பு உருவாகின்றது என்பதை பேராசிரியர் செரேமி பியர்சன் மற்றும் இவ்வாய்வை முன்னெடுத்தி நடத்திய கிருஷ்ணன் பாஸ்கரன் போன்றோர் ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.

வாகனப்புகையால் குருதியானது கெட்டியாகின்றது. இது இதயக் குருதிக்குழாயுள் உறைவடைந்தால் மாரடைப்பை ஏற்படுத்தும். எனவே ஏற்கனவே இதய நோய்கள உண்டு என அறுதியிடப்பட்டவர்கள் வாகன நெருக்கடி உள்ள பிரதான வீதி போன்ற இடங்களில் நீண்ட நேரம் இருப்பதைத் தவிர்த்துக்கொள்ளல் தேவையாகின்றது.

'பசுமைக்கான விதைகளை விதைக்க ஆரம்பித்தோம். விரைவில் வேறு சில விதைகளையும் நாங்கள் விதைத்தாக வேண்டும் என்பது புரிந்தது. மக்கள் சமுதாயங்களுக்கு சுய அறிதலையும் சுய சார்பையும் ஏற்படுத்த வேண்டிய விதைகளை நாங்கள் விதைக்க வேண்டும். தங்களுடைய சொந்த குரலில் அவர்கள் தங்களுக்கு உரிமையான அதிகாரங்களை பெற வேண்டும்.'

**— வங்காரி மாத்தாய்**

# லிபியாவில் கடாபியின் சகாப்தம் முடிந்தாலும் அமைதி திரும்புமா?

மைத்திரேயன்

**லி**பியாவில் ஏறத்தாழ நான்கு தசாப்த காலமாக அதிகாரத்திலிருந்த கேணல் கடாபியின் ஆட்சி பெரும்பாலும் அஸ்தமனத்தை நெருங்கிவிட்டது. கடாபிக்கு விசுவாசமான படைகள் இன்னமும் சில பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த போதிலும், தலைநகர் திரிப்பொலி உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகள் கிளர்ச்சிப் படைகளின் கைகளுக்கு வந்துவிட்டன. கடாபி இன்னமும் லிபியாவில்தான் இருப்பதாக நம்பப்படுகின்ற போதிலும், அவரது மகன் உட்பட அவரது அரசின் முக்கிய அதிகாரிகள் பலர் அருகிலிருக்கும் நைகர் நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.
ஆனால் கிளர்ச்சிப் படைகள் அடைந்துள்ள வெற்றி சுயமாக ஈட்டப்பட்ட ஒன்றல்ல. அது மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் பின்பலத்துடன், அவற்றின் நிதி, ஆயுத, விமானத் தாக்குதல் உதவிகளுடனும், வழிகாட்டலுடனும் அடையப்பட்ட ஒன்றாகும். ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியும், ஈராக்கில் சதாம் ஹூசேனின் ஆட்சியும் (சிறிய வித்தியாசங்கள் இருந்த போதிலும்) என்ன நோக்கங்களுக்காக வீழ்த்தப்பட்டனவோ, அதே நோக்கங்களுக்காகவே லிபியாவில் கடாபியின் ஆட்சியும் வீழ்த்தப்பட்டுள்ளது. அந்த இரு நாடுகளிலும் ஆட்சிகள் கவிழ்க்கப்பட்ட பின்னர் எப்படி இன்னமும் அமைதி திரும்பாமல் இருக்கின்றதோ, அதேபோல கடாபியின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட லிபியாவிலும் நிலைமைகள் உருவாகலாம்.

லிபியாவைப் பொறுத்தவரையிலும், கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் பெரும்பாலும் உள்நாட்டுக் குழப்பங்களும், ஸ்திரமற்ற நிலைமையும் உருவாகக் கூடிய வாய்ப்புகளே அதிகம் இருக்கின்றன. அங்கு போரிடும் கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் உள்ள முரண்பாடுகள் தீவிரமடைந்திருப்பதை, தேசிய இடைக்கால சபையின் தலைவரும், தற்காலிகப் பிரதமருமான முஸ்தபா அப்டெல் – ஜலில் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்று எடுத்துக் காட்டுகிறது. கிளர்ச்சி இயக்கங்கள் ஒற்றுமையாக செயல்படாவிடின்,



தான் பொறுப்பிலிருந்து விலகப் போவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லிபியாவில் தற்காலிக அரசாங்கத்தை நடாத்தும் தேசிய இடைக்கால சபையில் பல்வேறு விதமான முரண்பாடான குழுக்கள் அங்கம் வகிப்பதால், எதிர்காலத்தில் அதிகாரப் போட்டி ஏற்படக்கூடிய சாத்தியங்கள் நிறைய உள்ளன. இந்தக் குழுக்களுக்கிடையே உள்ள ஒரேயொரு கருத்தொற்றுமை, கடாபியை எப்படியும் ஆட்சிபீடத்திலிருந்து விரட்ட வேண்டும் என்பது மட்டுமே. பின்வரும் பிரதான குழுக்கள் இந்த இடைக்கால சபையில் அங்கம் வகிக்கின்றன.

**1. லிபிய எதிரணியின் தேசிய மாநாடு**. 2005இல் தொடங்கப்பட்ட இந்த இயக்கம்தான் இவ்வருடம் (2011) பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட கடாபிக்கு எதிரான கிளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. மேற்கத்தைய சார்பானதும், தாராள ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு ஆதரவானதுமான இந்தக் குழுவில், லிபியன் அரசியல்யாப்பு யூனியன், மனித உரிமைகளுக்கான லிபிய அணி மற்றும் லிபியன் ரிமாசைற் காங்கிரஸ் என்பன அங்கம் வகிக்கின்றன.

**2. லிபிய மீட்சிக்கான தேசிய முன்னணி**. இந்த இயக்கம் 1981இல் தொடங்கப்பட்டது. இதன் இராணுவப் பிரிவு லிபியன் தேசிய இராணுவம் என்ற பெயரில் 1988ஆம் ஆண்டு கலிபா க.ஃப்ரார் என்பவரால் தொடங்கப்பட்டது. இவர் இவ்வருடம்

மார்ச் மாதம் பெங்காசி நகர் திரும்பி கடாபிக்கு எதிரான அணிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டார். ஜேம்ஸ்ரவுண் பவுண்டேசன் என்ற சிந்தனைக் குழுமத்தின் ஆய்வுத் தகவல்களின்படி, இந்த இயக்கத்திற்கு அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனமான சீ.ஐ.ஏவின் ஆதரவும் பயிற்சியும் கிடைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

**3. லிபிய இஸ்லாமிய போராட்டக் குழு.** அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் பயங்கரவாத இயக்கமாக வரையறை செய்யப்பட்டுள்ள இந்தக் குழு, 1990களில் ஆப்கானிஸ்தானில் உள்ள பயிற்சி முகாம்களில் உருவாக்கப்பட்டதுடன், அல்கைடா இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொணடதுமாகும். இந்தக் குழுவின் நோக்கம் லிபியாவில் கடாபியின் மதச்சார்பற்ற அரசைத் தூக்கி எறிந்து, அதை ஒரு இஸ்லாமிய அடிப்படைவாத நாடாக மாற்றுவதாகும். இவர்கள் உலகம் முழுவதும் 'ஜிகாத்' குழுக்களுக்கு ஆதரவளிப்பதுடன், ஈராக்கில் அமெரிக்காவுக்கு எதிராகப் போரிடுவதற்காக தமது உறுப்பினர்களையும் அனுப்பியுள்ளனர்.

**4. ஏனைய குழுக்கள்.** இவை தவிர பெப்ரவரியில் கடாபிக்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பமான பின்னர் உருவான பல குழுக்களும் போராட்டக் களத்தில் நிற்கின்றன. அதில் முக்கியமான ஒரு குழு, கடாபியை நீண்டகாலமாக எதிர்த்து வரும் கிழக்கு லிபியாவில் உள்ள ஒரு சிறுபான்மை இனக் குழுமமாகும்.

லிபியாவுடனான அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை சம்பந்தமாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் செப்ரெம்பரில் ஆய்வொன்றைச் சமர்ப்பித்த மொடெல் என்பவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:
"யார் மேலே வருவார்கள் என்பதை எதிர்வு கூறுவது கடினமானது. உண்மையில் யார் அங்கு அரசாங்கத்தை அமைப்பது என்பதில் ஒரு போராட்டம் நிகழலாம். ஏனெனில் இந்தப் புரட்சியில் சில மத தீவிரவாதக் குழுக்களும் சம்பந்தப்பட்டிருப்பதால், இது தெளிவில்லாமல் இருக்கின்றது",

இந்த நிலைமைகளை வைத்துப் பார்க்கும் போது, கடாபி இல்லாத லிபியாவின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. கடாபியின் 42 வருடகாலம் நீடித்த ஆட்சிக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு உருவாவது இயல்பேயாயினும், அங்கு நடந்த ஆட்சி மாற்றம் ஏகாதிபத்திய சக்திகளின் அரசியல், பொருளாதார நலன்களுடனும் பின்னிப் பிணைக்கப்பட்டிருப்பதால், அங்கு அமைதி திரும்பி ஸ்திரமான அரசொன்று அமையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஏனெனில், ஏகாதிபத்திய சக்திகளின் தலையீட்டினால் ஆட்சிக் கவிழ்ப்பு நடந்த நாடுகளில் அமைதி திரும்பியதாக வரலாறு இல்லை.

**குறிப்பு:** இந்தக் கட்டுரைக்கான சில பயனுள்ள தகவல்கள் Toronto Star பத்திரிகையில் இருந்து பெறப்பட்டுள்ளன.
*

# நூல் விமர்சன நிகழ்வு

**லெனின் மதிவானம்** எழுதிய
**"பேராசிரியர் க.கைலாசபதி:
சமூக மாற்றத்திற்கான இயங்காற்றல்"**
என்னும் நூல் பற்றிய விமர்சன அரங்கு
இடம்: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன கேட்போர் கூடம், 58, தர்மராம வீதி கொழும்பு – 6
காலம்: 2011 அக்டோபர் 09, ஞாயிறு மாலை 4.30 மணி
தலைமை: சிவா சுப்பிரமணியம்
('தினகரன்' முன்னாள் பிரதம ஆசிரியர்)
விமர்சன உரை: பேராசிரியர் சபா.ஜெயராசா
கலாநிதி ந.இரவீந்திரன்
நிகழ்ச்சி ஏற்பாடு: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்
E-Mail: kailashpath@yahoo.com

# இந்தியாவைக் கூறுபோடவே இலங்கைக்கு எதிராக சில நாடுகள் செயற்படுகின்றன!

### இலங்கைப் பிரதமர் சாடல்

முன்னர் சோவியத் ஒன்றியத்தை உடைத்து பல சிறிய நாடுகளை உருவாக்கியது போலவே, இந்தியாவின் ஒருமைப்பாட்டைச் சிதைத்து, அதைப் பல நாடுகளாகக் கூறு போடுவதற்கான ஓர் உத்தியாகவே, ஐ.நா செயலாளர் நாயகம் நியமித்த தருஸ்மன் குழுவின் அறிக்கையை சில நாடுகள் பயன்படுத்தி வருவதாக, இலங்கையின் பிரதமர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்ததாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தனது 2011 யூன் 28 இதழில் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான துணைச் செயலர் ஓ பிளேக், அண்மையில் 5 நாள் பயணமாக இலங்கை வந்திருந்தார். அதில் ஒருநாள் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்தார். திரு.ஓ பிளேக் முன்னர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதராகப் பணிபுரிந்ததால், அவருக்கு யாழ்ப்பாணம் புதிய இடமல்ல. ஆனால் இம்முறை அவரது யாழ் விஜயம் சில கசப்பான அனுபவங்களை அவருக்கு ஏற்படுத்தி மன நெருடலை உண்டாக்கிவிட்டது.



# அமெரிக்கத் துணைச் செயலருக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவம்!

அவருக்கு எதிராக எதிர்பாராத வகையில் இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக, அவரும் உணர்ச்சி வசப்பட்டோ என்னவோ, சில சர்ச்சைக்குரிய கருத்துகளைப் பின்னர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜ தந்திரிகளுக்கு மக்கள் எதிர்ப்பு என்பது புதிய விடயமல்ல. குறிப்பாக, அமெரிக்கா வியட்நாம் நாட்டை ஆக்கிரமித்திருந்த 1960களில், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக அமெரிக்க அதிகாரிகள் உலகின் எப்பாகத்திற்குச் சென்றாலும், அவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் கூழ்முட்டை வீச்சுகளும் கல்வீச்சுகளும் நடப்பது வழமை.

உதாரணமாக, அந்தக் காலகட்டத்தில் இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக இருந்த அன்ரு வி கொறி என்பவர், யாழ் மாநகரசபையின் அழைப்பை ஏற்று, யாழ் பொது நூலகத்தில் அமெரிக்க நூலகப் பிரிவொன்றைத் திறந்து வைக்க வந்தார். ஆனால் அந்த நிகழ்வில் அவர் கலந்து கொள்ள முடியாதவாறு, வடபகுதி இளைஞர்கள் அவர் கார் மீது கூழ் முட்டைகளாலும் கற்களாலும் தாக்கி திரும்பிப் போக வைத்தனர்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் ஓ பிளேக்கிற்கு எதிராக நடந்துள்ள ஆர்ப்பாட்டம் வேறு வகையானது. அது ஓ பிளேக் இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக இருந்த காலத்தில், அமெரிக்காவிற்கு அவரது தூதரகம் அனுப்பிய கேபிள் செய்தியொன்றில், தமிழ் பெண்களை அவதூறு செய்திருந்ததாக, 'விக்கி லீக்ஸ்' வெளியிட்ட செய்தியொன்றின் காரணமாகவே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. இதில் கணிசமான பெண்களும் பங்கு பற்றியிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தை ஈ.பி.டி.பி கட்சியினரே ஒழுங்கு செய்திருந்ததாக பிளேக் கூறியுள்ளார். யார் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தார்கள் என்பதைவிட, எதற்காக ஆர்ப்பாட்டம் நடந்தது என்பதை அவதானிப்பதே முக்கியமானது.

இதற்கு சில மாதங்களுக்கு முன்னர், தமிழக மீனவர்களின் ஊடுருவலுக்கு எதிராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்னால் வடபகுதி மீனவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது. அந்த ஆர்ப்பாட்டத்தையும் ஈ.பி.டி.பி கட்சியே ஒழுங்கு செய்ததாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அந்த ஆர்ப்பாட்டத்துக்கான காரணம் நியாயபூர்வமானது என்பதால், இந்தியத் துணைத் தூதரகமோ இந்திய அரசோ ஆத்திரப்பட்டு யாரையும் திட்டவில்லை. அத்துடன், மக்கள் பிரச்சினை சம்பந்தமாக பல்வேறு அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடாத்துவது ஒன்றும் புதுமையான விடயமுமல்ல.

ஓ பிளேக் தனது யாழ்ப்பாண வருகையின் போது, வேறு பல சர்ச்சைக்குரிய கருத்துக்களையும் கூறிச் சென்றுள்ளார். தேர்தல்களில் போட்டியிட்டு மக்கள் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள கட்சிகள் எவையாயினும், அவற்றின் மீதான அரசியல் எதிரணியினர் பிரச்சாரங்களை வைத்து, ஒரு பொறுப்பு வாய்ந்த நாட்டின் இராஜதந்திரி கருத்துக் கூறுவது, இராஜதந்திர மரபுகளுக்கு முரணானது என்பதையும், அது உள்நாட்டு அரசியலாகிவிடும் என்பதையும், நாம் சொல்லித்தான் பிளேக் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**- கே.பஞ்சலிங்கம்**
(கொழும்புத்துறை – யாழ்ப்பாணம்)

# கனடாவின் ஒன்ராறியோ மாகாண தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது

கனடாவின் மிக முக்கிய மாகாணமான ஒன்ராறியோவின் 40வது பொதுத் தேர்தல் 2011 அக்டோபர் 6ஆம் நாள் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் கனடாவின் மூன்று பிரதான கட்சிகளான கொன்சவேட்டிக் கட்சி, லிபரல் கட்சி, நியு டெமக்கிரட்டிட் கட்சி என்பன போட்டியிடுகின்றன. இந்த மூன்று கட்சிகளுமே இம்மாகாணத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் ஆட்சிபீடத்தில் இருந்தவர்கள் என்ற வகையில், இவர்களது கொள்கைகளும் நடைமுறைகளும் என்னவென்பது இம்மாகாண வாக்காளர்களுக்கு ஓரளவு தெரிந்த ஒன்றுதான்.

தற்பொழுது கடந்த 8 வருடங்களாக ஆட்சியில் இருக்கும் பிரதமர் டால்ரன் மக்யுன்ரியின் (Dalton McGuinty) லிபரல் கட்சிக்கும், வலதுசாரி கொன்சவேட்டிக் கட்சிக்கும் இடையிலேயே பிரதான போட்டி நிலவுகின்றது. ஆனால் கொன்சவேட்டிக் கட்சி ஆட்சிக்கு வந்தால், மக்களின் அத்தியாவசிய சேவைகள் பலவற்றில் வெட்டுகள் விழும் என்ற அச்சம், குடியேற்றவாசிகள் அதிகம் வாழும் ரொறன்ரோவை தலைநகராகக் கொண்ட ஒன்ராறியோவில் நிலவுகின்றது.

கனடிய தமிழர்களைப் பொறுத்தவரை, கடந்த காலங்களில் லிபரல் அல்லது நியு டெமக்கிரட்டிக் கட்சிகளுக்கே அதிகம் வாக்களித்து வந்துள்ளனர். ஆனால் புலிகளின் கட்டாய வசூலிப்பு மற்றும் அடாவடித்தனங்கள் அதிகரித்த ஒரு சூழ்நிலையில், அவர்களில் ஒரு கணிசமான பகுதியினர் புலிகளுக்கு எதிரான கொன்சவேடிக் கட்சிக்கு வாக்களித்தனர். அக்கட்சியும் மத்தியில் ஆட்சிக்கு வந்ததும் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்ததுடன், புலிகளின் துணை அமைப்பான உலகத் தமிழர் அமைப்பையும் தடை செய்தது.

தற்போதைய சூழலில், புலிகளுக்கு ஆதரவான சக்திகளை அதிகம் ஆதரிக்கும் கட்சியாக நிய டெமக்கிரட்டிக் கட்சி இருப்பதால், தமிழர்களில் ஒரு பகுதியினர் அக்கட்சிக்கு இத்தேர்தலில் வாக்களிக்க விருப்பமின்றி இருக்கின்றனர். அத்துடன் அக்கட்சி ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பும் இல்லை.

எனவே பெரும்பாலான தமிழ் மக்கள் ஓரளவு நடுநிலைமையைப் பின்பற்றும் தற்போதைய ஆளும் கட்சியான லிபரல் கட்சிக்கே வாக்களிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இம்முறைத் தேர்தலிலும் புலிகளின் ஆதரவு பெற்ற தமிழ் வேட்பாளர்கள் சில கட்சிகளில் வேட்பாளர்களாக நிற்கின்றனர். இதுவரை எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகளின் படியும், லிபரல் கட்சியே சொற்ப பெரும்பான்மை வித்தியாசத்தில் மீண்டும் ஆட்சி அமைக்கும் எனத் தெரிய வந்துள்ளது.

**- பாலன்**

# ஒளியின் வேகத்தை விஞ்சிய நியூட்ரினோ

சுவிட்சர்லாந்தின் செர்ன் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து சுமார் 732 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இத்தாலிய ஆராய்ச்சிக் கூடம் ஒன்றுக்கு அணுவிலும் சிறிய துகள்களான நியூட்ரினோக் கற்றைகளை அனுப்பி அது பயணித்த நேரத்தை அளந்தபோது ஒளி பயணிக்க எடுக்கும் நேரத்தைவிடக் குறைவான நேரத்தில் பயணித்திருப்பதை முடிவுகள் காட்டின. 60 நானோ செக்கன்களால் (0.00000006 செக்கன்கள்) ஒளியைவிட விரைவாக வந்தடைந்ததை அறிந்தார்கள். இந்தப் பரிசோதனைகள் தொடர்பாக பல்வேறு ஆய்வாளர்கள் ஐயம்தெரிவித்துள்ளார்கள். எல்லாத் தரப்பினரும் மேலதிக ஆய்வுகள் தேவை என்று கூறி உள்ளார்கள். அந்த முடிவு உண்மையானால் பிரபஞ்சத்தின் இயல்பு பற்றிய மிகமுக்கியமான பௌதீக விதிகளில் ஒன்றை பொய்யாக்குவதாக இந்த கண்டுபிடிப்புஅமையும்.ஆகவே இவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் முடிவுகளை பொதுமன்றத்தில் முன்வைத்து, தாங்கள் எந்த இடத்திலாவது பிழை விட்டிருக்கிறோமா என்பதை பிற விஞ்ஞானிகள் கண்டறிந்து சுட்டிக்காட்ட வேண்டும் என இவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

16ம் பக்கத்தொடர்ச்சி...

இப்படியே பெண்கள், மனித உரிமைகள் என்று பல அடிப்படைகளில் பிரச்சாரங்களை ஆப்பிரிக்க மக்களிடையே பரப்பினார். எப்படிப்பட்ட பெண்கள் ஆப்பிரிக்காவிற்கு வேண்டும் என்பதையும் ஆழமாக உணர்த்தினார். இவரின் பணியை எண்ணில் அடக்க முடியாத வகையில் அவர் விட்டுச் சென்ற நல்ல விசயங்கள் உயிரோடிக் கொண்டிருக்கின்றன.

**-வீ. அ. மணிமொழி**

*

# சிறப்புற நடைபெற்ற கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் நினைவுப் பேருரை

இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த கல்விச் சிந்தனையாளருமான தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் 34வது நினைவு தினப் பேருரை, 2011 செப்.25 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி குமுது குசும்குமார, "உலக மயம் – இலங்கை சமூகமும் கலாச்சாரமும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். நிகழ்வுக்கு மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் தலைமை தாங்கினார்.

# கடந்த ஒரு தசாப்த காலத்தில் உலகில் பயங்கரவாதம் தீவிரமாக வளர்ந்துள்ளது!

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்களின் மீதும், பென்டகன் இராணுவத் தலைமையகத்தின் மீதும் அல்கைடா இயக்கம் நடாத்திய 'செப்ரெம்பர் 11' தாக்குதலின் பின்னரான ஒரு தசாப்த காலத்தில், உலகின் 66 நாடுகளில் 119,044 பயங்கரவாதச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக, 'அஸோசியேற்டேட் பிரஸ்' சமீபத்தில் வெளியிட்டுள்ள ஆய்வொன்றில் தெரிவித்துள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 35,117 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இக்காலகட்டத்தில், அமெரிக்காவில் மட்டும் 2,934 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 2,566 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் 2006இல் 1,552 பேர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், 2009இல் 12,856 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். துருக்கியில் 12,897 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானோர் துருக்கியிடமிருந்து பிரிவினை கோரும் குர்டிஸ் போராளிகளாவர்.

இந்தக் காலகட்டத்தில் சீனாவில் 7,000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சீனா பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாதம் என்பனவற்றை "மூன்று பிசாசுகள்' என வரைவிலக்கணம் செய்துள்ளது.
*

# கனடாவில் 'வாழும் மனிதம்'

'வாழும் மனிதம் – 2' நிகழ்வு, கனடாவின் ஸ்காபரோ நகரிலுள்ள சிவிக் சென்ரர் மண்டபத்தில் 2011 ஆகஸ்ட் 27ஆம் திகதி அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.
இந்நிகழ்வில் பிரித்தானியாவிலிருந்து வருகை தந்த மூத்த எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு, "போருக்கப் பிந்திய சமூக மாற்றமும், முற்போக்காளர்களின் கடமையும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

15ம் பக்கத்தொடர்ச்சி...

அதேநேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்பும் இதைப் பாரதூரமாக கவனத்தில் எடுப்பது அவசியம்.

இன்றுள்ள சூழ்நிலையில், தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காண்பதானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பை தீர்வு முயற்சிகளுக்காக நம்பி இருப்பது ஒருபோதும் பிரயோசனப்படாது. இது வரலாறு காட்டும் உண்மை. எனவே அதைச் செய்வதானால், முதலில் மீண்டும் ஜனநாயக தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பை உருவாக்குவது அவசியம். அதை சாத்தியமாக்குவதற்கு முன் கையெடுத்து செயற்படுவதற்குரிய தகைமை தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை, ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ஈ.பி.டி.பி என்பனவற்றுக்கே உண்டு. அந்த இரு கட்சிகளும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ இதுபற்றி பாரதூரமாக ஆலோசிக்க வேண்டும்.

வலதுசாரி, பிற்போக்குவாத, ஏகாதிபத்திய சார்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக, மாற்று ஜனநாயக அணியொன்றை உருவாக்காமல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு இல்லையென்பதையும், தமிழ் ஜனநாயகக் கட்சிகளுக்கு வாழ்வில்லையென்பதையும், இந்தப் பிரச்சினையில் அக்கறையுள்ள அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.
*

புரட்சி என்பது வரலாற்றை இழுத்துச் செல்லும் தொடர்வண்டி. வர்க்க முரண்பாடுகள் பகையாக வளரும்போது புரட்சி வெடிக்கிறது. இந்தப் புரட்சி புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறது. அடி முதல் நுனி வரையிலான மாற்றங்களைக் கொண்டு வருகிறது. பல நூற்றாண்டுகளில் ஏற்படாத மாற்றங்களை சில தினங்களில் கொண்டு வந்து சேர்க்கிறது. பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தமுடியும்.

**– எங்கெல்ஸ்**

முன்பக்கத்தொடர்ச்சி...

பிரச்சினைக்குத் தீர்வாக இன்றுவரை கருதி வருகின்றது. இனிமேலும் பல காலத்திற்கு இந்திய அரசின் நிலைமை அதுவாகத்தான் இருக்கும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையிலும் கூட, அவர்கள் இன்றிருக்கும் நிலையில், அரசியல் ரீதியாகவும் தந்திரோபாய ரீதியாகவும், இந்திய – இலங்கை உடன்படிக்கை வழங்கியுள்ள 13வது திருத்தச் சட்டத்தின் கீழான தீர்வை ஏற்பதே அரசியல் ஞானமும் புத்திசாலித்தனமானதுமாகும். அதுமாத்திரமல்லாமல், அந்தத் தீர்வை தென்னிலங்கையிலுள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளதால், அது அனுகூலமாகவும் இருக்கும்.

நிலைமை இவ்வாறு சாதகமாக இருந்த போதிலும், மிகவும் வலதுசாரித் தன்மை வாய்ந்ததும், புலிகளின் அழிவின் பின்னரும் அவர்களது கொள்கையை இன்னமும் அடி பிசகாமல் பின்பற்றி வருவதும், தமிழ் கட்சிகளிலேயே கூடுதலான ஏகாதிபத்தியத் தொடர்புள்ளதுமான தமிழ் காங்கிரஸ் கட்சி, வழமையான செல்லரித்துப்போன தமிழர் தேசியம், தன்னாட்சி உரிமை, சுய நிர்ணயம் என்ற கோசங்களை எழுப்பி புதுடில்லி சந்திப்பைக் குழப்பியடித்து, இந்தியாவின் முயற்சியைச் சீர்குலைத்துள்ளது.

தமிழ் காங்கிரசின் இந்த சீர்குலைவு வேலையை அக்கூட்டத்தில் பங்குபற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகள் யாவும், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றன. அதற்குக் காரணம், அவர்களது நிலைப்பாடும் தமிழ் காங்கிரசின் நிலைப்பாடும் ஒன்று என்பதே உண்மையாகும்.

ஆனால், இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் என்பன, ஏதாவதொரு நல்லதொரு முடிவு கிட்டும் என எதிர்பார்த்து ஏமாந்து போனதை, ஈ.என்.டி.எல்.எப் பின்னர் அக்கூட்டம் பற்றி விடுத்த அறிக்கை புலப்படுத்துகிறது. அத்துடன் இந்த நான்கு கட்சிகளும் பின்னர் நாடு திரும்பும் வழியில் தமிழகத் தலைநகர் சென்னையில் கூடி இந்தக் கூட்டத்தின் பெறுபேறுகள் (தோல்வி) குறித்து ஆராய்ந்துமுள்ளன. குறிப்பாக தமிழ் காங்கிரசின் சீர்குலைவு வேலை பற்றியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை வேடம் பற்றியும் இக்கட்சிகள் கடும் விசனம் தெரிவித்ததாகத் தெரிய வருகிறது.

உண்மையில் இந்த நான்கு கட்சிகளும் அடிப்படையான ஓர் உண்மையை இந்தச் சந்தர்ப்பத்தில் உணர்ந்து கொள்வது அவசியமானது.

அதாவது, தமிழ்மக்கள் பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றி வரும் கொள்கைகளின் அடிப்படையில் எட்டப்பட முடியாதது என்பதை இவைகள் உணர வேண்டும். ஏனெனில், கடந்த 60 ஆண்டுகளாக தமிழ் காங்கிரசிலிருந்து கடைசியாகப் புலிகள் வரை, இந்த மலட்டுத்தனமான கொள்கையைப் பின்பற்றிய காரணத்தாலேயே தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட முடியாமல் போனது என்ற உண்மையை விளங்குவது அவசியம். தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அதே தவறான கொள்கையையே பின்பற்றுகிறது.

உண்மையில் பலரும் கூறி வருவது போல, (இதை ஆனந்தசங்கரி தனது அண்மைய த.வி.கூ மாநாட்டிலும் கூறியிருக்கிறார்), தமிழ் கட்சிகளின் ஒற்றுமையின்மையாலேயே தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடுகின்றது என்பது உண்மையல்ல. தமிழ்த் தலைமைகள் அன்றிலிருந்து இன்று வரை பின்பற்றி வரும் ஏகாதிபத்திய சார்பு, ஐ.தே.க சார்பு, இனவாத கொள்கைகளே தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு இடையூறாக இருந்து வருகின்றன. ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனம் தனது விடுதலையை வென்றெடுக்க வேண்டுமானால், இதற்கு எதிரான பாதையிலேயே பயணிக்க வேண்டும்.

அதன் காரணமாகவே, யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், சில ஜனநாயக சக்திகளின் முயற்சியால், ‘தமிழ் கட்சிகளின் அரங்கம்’ என்ற தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் அணி அமைக்கப்பட்டது. இந்த அணி உருவாக்கப்பட்டவுடனேயே, பிற்போக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பும், சில வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளும் அதை உடைப்பதற்கு பல விதமான முயற்சிகளையும் மேற்கொண்டன. அதற்குக் காரணம் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட, தமிழ் கட்சிகளின் அரங்கம் தேசிய இனப்பிரச்சினையில் ஜனநாயகபூர்வமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததுடன், பரவலான அரசியல் பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருந்தது என்பதாலாகும்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது இடையறாத சதி முயற்சிகளின் காரணமாக, இறுதியில் தமிழ் கட்சிகளின் அரங்கத்தை உடைத்து, அதில் முக்கிய பங்காளிகளாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் என்பனவற்றை தனது பக்கம் இழுத்துக் கொண்டது. அந்த இரு கட்சிகளும் மேற்கொண்ட தவறுக்கான காரணிகளை ஆராய்வது எமது நோக்கமல்ல. ஆனால் அவர்கள் தாம் விட்ட தவறை, புதுடில்லி கூட்டத்தின் தோல்விக்குப் பின்னராவது உணர்ந்து கொள்வது அவசியம்.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# நோபல் பரிசு அழகி - வங்காரி மாத்தாய்



ஆப்பிரிக்காவில், மரத்தின் அன்னை (The Tree Mother Of Africa) என போற்றப்பட்டு வந்த வங்காரி மாத்தாயின் இறப்புச் செய்தியை உலக மக்கள் அறிந்திருப்பர். அவரின் மரணச் செய்திக் கேட்டு உலக மக்கள் யாவரும் மிகவும் சோகத்தில் ஆழ்ந்திருப்பது மாத்தாயின் உயர்ந்த சேவையை எண்ணிப் பார்க்க வைக்கின்றன. இது உலக மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு எனலாம்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட வங்காரி மாத்தாய், கடந்த 25 செப்டம்பர் 2011 இல் தனது 71ஆம் வயதில், நைரோபியிலுள்ள மருத்துவமனையில் தனது உயிரைத் துறந்தார். 1 ஏப்ரல் 1940இல் பிறந்த இவர், தனது கென்யா நாட்டின் பெண்களின் அடையாளமாய் விளங்கினார். பெண்களுக்கு மிகவும் பக்கப் பலமாகவும் முன்னுதாரணமாகவும் இருந்த இவரின் செயலைக் கண்டு பலரும் பெருமை பட்டனர். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர், கென்யா நாட்டில் பெரும்பான்மையான கிகுயு (kikuyu) என்ற இனத்தைச் சார்ந்தவர். இந்த அழகிய பெண்மணியின் சேவையையும் தியாகத்தையும் பாராட்டி 2004ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. உலக அமைதிக்கான நோபல் பரிசு வென்ற முதல் ஆப்பிரிக்கா பெண்மணி என்ற பெருமையும் இவரையே சேரும். அரசியல், சமூகம் மற்றும் சுற்றுச் சூழல் நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டும் வந்தார். கென்யா நாட்டின் சுற்றுச் சூழல் அமைச்சின் துணை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

வறுமையின் காரணமாக, எத்தொழிலையும் செய்யத் துணிந்த ஆப்பிரிக்கா மக்கள், தங்களின் சுயநலத்திற்காக மரங்களையும் வெட்டி பணம் சம்பாதித்துக் கொண்டிருப்பதை அறிந்த பின், இவர் மிகவும் மன உளைச்சல் அடைந்தார். அவர்களின் இந்நடவடிக்கைகள் எதிர்காலத்தின் அழிவிற்கு வித்திடும் என நம்பிய இவர் கிரீன் பெல்ட் (Green Belt) என்ற இயக்கத்தைத் தொடங்கி அதில் தீவிரமாக ஈடுப்பட்டு வந்தார். இவ்வியக்கத்தின் மூலம் மரங்களின் அவசியத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பற்றி ஆப்பிரிக்க மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டினார். இந்நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்பு மாத்தாய் முதலில் கென்யா மக்களின் தேவைகளைக் கேட்டறிந்தார். அவர்களுக்கு அவசியமான நல்ல குடிநீர், சமைப்பதற்கு விறகுகள், சத்துள்ள உணவு, கட்டுமானப் பொருட்கள் என இன்னும் சில தேவைகளையே முன்வைத்தனர்.

அதற்கு, மாத்தாய் “உங்களுக்குப் பணம் வேண்டுமானால் மரத்தை நடுங்கள். அவை உங்களுக்குப் பணம் தரும்.” என்றார்.

ஆப்பிரிக்கப் பெண்கள் “ எங்களுக்கு மரம் நட தெரியாது” என்றார்கள். சில வன அதிகாரிகளின் உதவியை நாடியபின் பெண்கள் மரக்கன்றுகளை நடத் தொடங்கினர். வளர்ந்த மரக்கன்றுகளைத் தங்களின் நிலத்திலேயே நட்டு வந்தனர். இப்படியே பல ஆயிரம் மரங்களை உருவாக்கினர். மரம் வளர்ந்த பிறகு நல்ல விலையில் போனது. இது பெரும் மாற்றத்தை பெண்களிடம் கொண்டு வந்தது. ஏனென்றால் மரம் நடுதல் அவர்களுக்குப் பணம் சம்பாதிக்கும் தொழிலாக மாறிவிட்டது.

மாத்தாய் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் கொள்ளாமல், சமூகத்தின் வளர்ச்சியிலும் அதனால் நாட்டிற்கு ஏற்படும் முன்னேற்றங்களைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கலானார். அதனால், இம்மூன்று கூறுகளையும் ஒன்றிணைத்து பார்க்கத் தொடங்கினார். தமக்கு நோபல் பரிசு வழங்கிய விழாவில் “அமைதி இல்லாத ஒரு நாட்டில் வளர்ச்சி இருக்காது. மக்களாட்சி மாண்புகளை மதிக்காத ஒரு நாட்டை நீங்கள் முன்னேற்ற முடியாது. மேலும் இயற்கை வளங்களைச் சரியாக கையாளாத நாட்டின் வளங்கள் சுரண்டப்படுகின்றன. பெரும்பான்மையை ஏமாற்றி சிறுபான்மையிடம் வளங்கள் ஒப்படைக்கப்படுகின்ற ஒரு நாட்டை முன்னேற்றவே முடியாது” என தனது ஏற்புரையில் கூறினார்.

சுற்றுச்சூழலைப் பாதுக்காக்க வேண்டும் என்ற விழிப்புணவை ஏற்படுத்த அவர் மேலும் பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வந்தார். அதில் ஒன்று, இவ்விழிப்புணர்வைச் சிறுவயதில் மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக புதிய பாடத்திட்டம் ஒன்றை உருவாக்கினார். இவரின் இச்செயலால் ஆப்பிரிக்க மக்கள் தங்களின் நில அவசியத்தை மிக அருகில் புரிந்துக் கொண்டனர்.

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...